தமிழ்ச் சிறுகதைகளில் ஈரறிவு உயிரினங்கள் பற்றிய பதிவு முயற்சிகள்

முனைவர் ஆ. பூமிச்செல்வம்
இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை
DOI: https://doi.org/10.5281/zenodo.19230382

தொடக்கமாக

மானுடர்களாகிய நாம் வாழுகிற இப்பூலோகப் பரப்பில் காணக்கிடைக்கிற புழுக்கள் பூச்சிகள், தாவரங்கள், விலங்குகள் மற்றும் பலவிதப் பறவை இனங்கள் என இவை அனைத்துடனும் கூடி மானுட இனமும் இணைந்து வாழுகிற அமைப்பு முறையையே பல்லுயிரியம் என அழைத்து வருகின்றனர். பல்லுயிரினங்களின் ஒரே வாழ்வாதாரமாகவும், அவ்வுரியிகளின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒப்பற்ற ஆதாரமாகவும் திகழ்வது இயற்கைச் சூழல் என்கிற காரணியே ஆகும். இவ்விதக் காரணியைப் பாதுகாத்திடவென, இப்புவிப் பரப்பில் இருக்கிற ஏனைய உயிர்கள் அனைத்தும் தம்மால் இயன்ற அளவுகளில் தங்களது பங்களிப்பை, உரிய முறையில் தவறாமல் செலுத்தி வருகின்ற நிலையில், ஆறறிவு பெற்றவராகத் தமக்குத் தாமே சொல்லிக் கொள்கிற மனித இனம் மட்டும் தனது சுயநலனின் பொருட்டு, இயற்கைக்கு எதிரான செயல்பாடுகளை இப்புவிப் பரப்பில் விதவிதமாகப் புரியத் தொடங்கியிருக்கிறது. விளைவு, பன்முகச் சூழல் மாசுபாடுகள் மேலெழுந்து, இவ்வுலகம் பேரழிவை நோக்கித் தள்ளப்பட்டிருக்கிறது. இந்நிலையில்தான், தம்மையும் தாம் சார்ந்த இவ்வுலகையும் தன்னலனின் பொருட்டாகவேணும் பாது காத்தே ஆக வேண்டும் என்கிற நெருக்கடி நிலைமையானது மானுடர் மத்தியில் சம காலத்தில் மேலெழத் தொடங்கியிருக்கிறது. இதன் ஒருவித வெளிப்பாடுதான், பலவிதக் கலை இலக்கியவாதிகள் கூடத் தம் படைப்புகளின் வாயிலாகச் சூழல் மேம்பாடுகளை முன்னெடுக்க முயன்றுள்ள நிகழ்வு. இவ்விதத்தில் பார்க்கும்பொழுது, தமிழ்ப் புனைவெனும் ஈராயிரம் ஆண்டு கால நெடும்பரப்பில் மானுட வாழ்வை இயற்கை உயிர்களுடன் இணைத்துப் பேசுகிற முறைமையைப் பற்பல படைப்பாளியர்கள் வெகுவாகச் செய்தே வந்துள்ளனர் என்பது புலனாகிறது. இருப்பினும் கூட, தமிழ் இலக்கியப் பரப்பினை கூர்ந்து அவதானித்தறிய முற்படும் வேளையில், இயற்கைசார் கூறுகளானவை பெரும்பாலும் மானுட வாழ்நிலைகளை பிரதிபலிப்பதற்கான பின்னணிகளாக மட்டுமே படைப்பாளியரால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதும் தெரிய வருகிறது. ஆனால், இதற்குச் சற்று மாற்றாக, தமிழ்ச் சிறுகதைகளில் இவ்வித இயற்கை சார்ந்த அம்சங்கள் மானுட வாழ்நிலையுடன் ஒன்றிப் பயணப்படுகிற மாந்தர்களாகவும், பலவேளை குறியீட்டு அம்சங்களாகவும், தொன்ம உருக்களாகவும், துவந்த உறவுகளாகவும் தொழிற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவற்றினும் குறிப்பாக, தமிழ்ச் சிறுகதைகளில் இயற்கைசார் உயிரினங்கள் மீதான அனுசரணைப் பதிவுகள் என்பவை சற்றுத் தூக்கலாகவே தென்படுகின்றனதான். என்கிற விதத்தில் ஈரறிவுஉயிர்கள்பற்றியானபதிவுமுயற்சிகள் இச்சிறுகதைப் பிரதிகள் யாங்ஙனமெல்லாம் உள்ளன என்பதைக் காணமுயற்சிப்பதாக இனி வரும் பகுதி அமைகிறது.

ஈரறிவு உயிரினங்கள் – விளக்கம்

நாம் வாழுகிற இவ்வுலகம் மூன்று பாகம் நீராலும் ஒரு பாகம் மட்டுமே நிலத்தாலும் சூழப்பட்டிருப்பினும் கூட, நம்முள் பெரும்பாலோர் நிலத்தில் வாழுகிற, அதுவும் சற்று நம்முடன் அணுக்கமாக இருக்கிற உயிரினங்களை மட்டுமே அறிந்து வைத் திருக்கிறோம். நம்முடன் வாழுகிற பெரும் பான்மை உயிரினங்கள் நம்மைப் போலவே வாழ்வியல் நடைமுறைகளைப் பேணுகிற நிலையில், அவற்றிலும் பல விதங்களில் விசித்திரமான, விநோதமான வாழ்நிலைகளைக் கொண்டிருக்கிற நீர்வாழ் உயிரினங்களை, நீரிலும் நிலத்திலும் வாழத் தகுதி கொண்டுள்ள உயிரினங்களைப் பற்றியான அறிதல் முயற்சிகள் என்பன நம்மிடத்து மிகக் குறைவாகவே இருக்கின்றன. என்கிற நிலையில், "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே / இரண்டறிவதுவே அதனொடு நாவே / மூன்றறிவதுவே அதனொடு மூக்கே/ நான்கறிவதுவே அதனொடு கண்ணே / ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே/ ஆறறிவதுவே அவற்றொடு மனனே/ நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"[1] என்கிற விதத்தில் நெறிப்படுத்தியுள்ள தொல்காப்பியரின் பார்வையில் பார்க்கும் போது, ஈரறிவு கொண்ட உயிர்கள் என்பன "உடல் (மெய்), வாய் (நாக்கு) ஆகிய இரு பண்புகளைக் கொண்டு, தொடுதல் மற்றும் சுவைத்தல் மூலம் உலகை அறியும் உயிரினங்கள் ஆகும்"[2] என்கின்றனர். ஈரறிவு கொண்ட இவ்வுயிரினங்கள் பற்றி அறிய முற்படும் வேளையில், இவை பின்வருமாறு பாகுபாடு பெறுகின்றன.

ஈரறிவு உயிரினங்களின் வகைகளும் உடல் அமைவு முறைகளும்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வுலகில் தோன்றி, இன்றளவிலும் வாழ்ந்து வருகிற உயிரினங்களைப் புரோட்டோ பிளாசத் துணுக்குகளின் நன்கொடை என்று அறிவியலாளர் சொல்லுவர். இவ்வித உயிர்த் துணுக்குகளானவை சுற்றச் சூழல் அமைவுகளுக்கு ஏற்பத் தம்மை பலவாறு தகவமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிற நிலையில், இவற்றுள் ஒருவித உயிரின வகையாக இருப்பது தான் ஈரறிவு உயிரினங்கள் என்பனவும். இவை, "நத்தை (நந்து), சங்கு (முரல்), சிப்பி (கிளிஞ்சல்), அட்டை, மீன், ஏரல் (ஒருவகை கடல்வாழ் உயிரி), பவளம் என்பனவாக வகை பிரிகின்றன. இவ்உயிரினங்கள் பெரும்பாலும் மென்மையான உடல் அமைப்புக் கொண்டிருப்பதுடன், இவற்றுள் சில நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியனவாகவும் உள்ளன"[3] என்பர்.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஈரறிவு உயிரிகள் பற்றிய பதிவுகள்

"இயற்கையைப் பாராட்டுவதற்காகவே பாடல் பாடுகின்ற மரபு என்பது செவ்விலக்கியங்களில் இல்லை" என்று நம்மில் சிலர் விமர்சிப்பது உண்டு. இருப்பினும் கூட, இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்திடும் விதமாக, பெரும்பாணாற்றுப் படையில் மீன் எனும் இயற்கைசார் ஈரறிவு உயிரைப் பற்றி, நுட்பமான தகவல்கள் பல உள்ளன. சான்றாக, "வல்வாய்ச் சாடியின் வாழைச்சற விழைந்த / வெந்நீர் அரியல் விரலை நறும்பிழி / தண்மீன் சூட்டோடு தளர்தலும் பெறுகுவீர்"[4] என அமைந்துள்ள வரிகளைக் காட்டலாம். இவற்றின் வாயிலாக, சங்ககாலமக்கள் அரியல் எனும் ஒருவித மீனைத் தம் விரல்களால் அலைத்துப் பிடித்து, இரண்டு பகல் மற்றும் இரவுகள் இனிமை பயக்கும்படி புளிக்க வைத்து, பின்னர் வெந்நீரில் வேகச் செய்து, தம் விருந்தினருக்கு உணவாக்கினர் என்னும் கருத்தானது புலப்படலாகிறது. சங்க இலக்கியப் புறப்பாடல்கள் மட்டுமன்றி, அகப் பாடல்களிலும் ஈரறிவு உயிர்கள் பற்றிய பதிவுகள் காணக் கிடைக்கின்றன. சான்றாக, அகநானூற்றின் 10ஆம் பாடலில் உள்ள,

'பழந்திமில் கொன்ற புதுவகைப் பரதவர்/ மோட்டுமண லடைகரைக் கோட்டு மீன் கொண்டி / மணங்கமழ் பாக்கத்த"[5] எனும் வரிகளின் வழி, பரதவர்களின் வலையைக் கிழித்து, அவர்களுக்குப் பயத்தைக் கொடுத்த ஒருவித உயிராக மீன் பாவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, தொல் இலக்கியங் காலந்தொட்டே ஈரறிவு உயிரினங்கள் பற்றிய பதிவுகள் உள்ளனதான். எனினும், இவை மனிதர்க்குப் பயன்படுவன தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு மனிதரை அச்சு றுத்துவன என்பனவாகவே வகைப்பட்டும் அமைந்துள்ளன.

தமிழ்ச் சிறுகதைத் தடத்தில் ஈரறிவு உயிர்கள் பற்றியான சிறுகதைகளின் நிரல்

காலந்தோறும் தமிழிலக்கியத் தடங்களில் ஈரறிவு உயிர்கள் பற்றியான பதிவுகள் ஆங்காங்கே தென்படினும்கூட, நவீன இலக்கியங்களிலேதான் அவை சற்று விஸ்தீரணம் பெற்றிருக்கின்றன. இதனினும் குறிப்பாக, சிறுகதைகளின் மூலமேதான் இவை பெரும்பாலாக அவதானம் பெற்றுள்ளன. இவ்வரிசையில், நத்தை எனும் உயிரினம் பற்றி பிரேம் ரமேஷின் 'நத்தை கதை', எஸ்.ராமகிருஷ்ணனின் 'நத்தைகளின் புன்னகை' என்கிற கதைகளும், சங்கு பற்றி நா.பார்த்தசாரதியின் 'வலம்புரிச் சங்கு" எனும் கதையும், சிப்பி பற்றி சோ.தர்மனின் "அன்பின் சிப்பி" எனும் கதையும் அட்டை பற்றி பாவண்ணின் "அட்டை" என்னும் கதையும் மீன் பற்றி சா.கந்தசாமியின் "தங்கையின் மீது நான்கு கண்கள்", பிரபஞ்சனின் "மீன்", அம்பையின் "மஞ்சள் மீன்", பெருமாள் முருகனின் "நடுப்பகல் மீன்கள்" என்கிற கதைகளும் நிரல்படுகின்றன. இவ்வரிசையில், ஏரல் பற்றியோ, பவளம் பற்றியோ எவ்விதக் கதைகளும் தென்படாமை என்பது குறிக்கத் தக்கதாகிறது.

தமிழ்ச் சிறுகதைகளில் ஈரறிவு உயிரினங்கள் குறித்த உள்ளடக்கப் பொருண்மைகள்

பொதுவாக, தமிழிலக்கியப் படைப்பு முறைமைகள் பற்றிப் பேச வரும்போது, அவை இயற்கை மீதான பேரன்பையும் மானுடம் உள்ளிட்ட ஏனைய உயிர்களுக்கான நீதியையும், அறத்தையும், அரவணைப்பையும் பேணுவன என்று சொல்லப்படுவதுண்டு. இவ்விதத்தில் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியோர் ஒரு முள்ளிச் செடிக்கும் கூட முக்தியைத் தேடியோர் எனப் பற்பலர் தமிழ் படைப்பிலக்கிய வெளியில் காணக் கிடைக்கின்றனர்தான். இவ்விதப்பட்டோர் போன்று தமிழ்ச் சிறுகதைப் பனுவல்களிலும் தென்படுகின்றனரா எனப் பார்க்கும்போது, முதலில் பிரேம் ரமேஷின் "நத்தை கதை" என்பது பார்வையில் படுகிறது. இக்கதை, தன் குழந்தையின் கதை கேட்கும் ஆர்வத்திற்கு ஈடுகொடுக்கும் பொருட்டாகக் கதை சொல்ல முனைகிற, ஒரு தந்தையின் பார்வையில் நகர்கிறது. கடலை சார்ந்திருக்கும் அவ்வூருக்கு, கடலிலிருந்து கிடைக்கும் பாறை போன்ற ஒரு காளானின் வழித் தீங்கு வந்து சூழ்வதாகத் தொடங்கிடும் இக்கதை, பின்னர் ஒரு காளானின் கீழ் அடைக்கலம் தேடும் இரு நத்தைகளைப் பற்றிப் பேசத் தொடங்குகிறது. இறுதியில், அந்தக் காளானின் கீழ் தம் முள்ளியார் இடம் பிடிப்பது எனப் போட்டியிட்டு, தாம் அண்டியிருந்த காளானையே கவிழ்த்து விட்டு, பின் வருந்து வதாக கதை நிறைகிறது. குறிப்பாக "முதல் நத்தை எனக்கே இடம் இல்லை நீ வேற வரியா என்று அதைத் தள்ளி விட்டுச்சாம். இரண்டாவது நத்தை, முதல் நத்தையைத் திருப்பித் தள்ள இரண்டுக்கும் சின்ன சண்டை வந்துச்சாம். அந்தச் சண்டையில் ரெண்டும் சேர்ந்து காளானைத் தள்ளி விட காளான் தலைகீழா கவிழ்ந்துச்சாம் ரெண்டு நத்தைகளும் காளானைப் பார்த்து வருந்துச்சாம். முதல் நத்தை இப்படிச்

சொல்லுச்சாம் இனி நாம"[6] என்பதாக அமைகிற பகுதி, தன் நலன் பொருட்டுப் பிறருக்குத் தீங்கு விளைக்காலாகாது என்கிற அறத்தை வலியுறுத்த முயன்றிருக்கிறது. இருப்பினும், இது நத்தை பற்றிய அரவணைப்பை எவ்விதத்திலும் வழங்கியிருக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது. இதனைத் தொடர்ந்து, எஸ்.ரா.வின் நத்தைகளின் புன்னகை என்னும் கதையானது இந்த உலகத்தின் எல்லையை அறியத் துடித்து, இறுதியில் ஏமாந்து போகிற நத்தையினங்களின் அறியாமையைப் பற்றிப் பேசியிருக்கிறது. இக்கதை நத்தையினத்திற்குச் சொல்லப் பட்டதல்ல மனித இனத்திற்கே என்பதைக் கதையின் முடிவு நமக்குத் தெரிவிக்கும்.

தமிழில் நத்தைகளைப் பற்றி இரண்டு கதைகளே தென்படுகிற நிலையில், சங்கு இனம் பற்றி ஒரே ஒரு கதைதான் காணக் கிடைக்கிறது. அது நா.பார்த்தசாரதியின் வலம்புரிச் சங்கு என்பது. தன் குடும்ப வறுமை காரணமாகக் கடன் பட்டிருக்கும் பூமாலை என்னும் சங்கு குளிக்கும் ஏழை மனிதன், தன் முதலாளியால் வலம்புரிச்சங்கைப் பிடித்து வரவென நிர்பந்திக்கப்பட்டு, இறுதியில் அவன் பரிதாபமாக உயிர் விடுவதை உருக்கமாகக் காட்டியிருக்கிறது இக்கதை. "வலம்புரிச் சங்கு அற்புதமாகத்தான் இருந்தது. லட்சக்கணக்கில் என்ன, கோடி ரூபாய் கூட பெறும் இது"[7] என விவரணை பெற்றுள்ளஒருபகுதி,சங்கினைத்தைப்பற்றி இல்லாமல் அதைத் தன் நலனிற்காகப் பார்க்கிற மானுடப் பயங்கரங்களின் மனநிலையைப் புலப்படுத்துவதாக மட்டுமே இருக்கிறது.

நம்மில் பலர் மீன்களை வெகுவாகப் பார்த்திருப்போம் சங்கை சில போது பார்த் திருக்கலாம். ஆனால், சிப்பியை நேரில் பார்த்தவர் எனப் பெரிதும் இல்லாதே இருப்பர். இவ்விதத்தில்தான், சிப்பி பற்றிய சிறுகதை ஒன்று தமிழில் வெகு அரிதாகக் காணப் படுகிறது. தமிழகத்தை ஆட்சி புரிந்த கிழக்கிந்திய கம்பெனித் துரைகளுள் ஒருவரான உவேல்ஸ் துரையின் திறக்கப்படாத பேரன்பைப் புலப்படுத்து வதற்கான குறியீடாக சோ.தர்மனால் இது படைக்கப்பட்டிருக்கிறது. அன்பின் சிப்பி என்னும் பெயர் கொண்ட இக்கதை, மருது சகோதரர் மகனான துரைசாமி மீது உவேல்ஸ் துரைகொண்டிருந்தபேரன்பைவெளிப்படுத்தும் முகத்தான் உருப்பெற்றிருக்கிறது. இக்கதை போன்றே பிறரின் உழைப்பை, உடமையை உறிஞ்சிப் பிழைப்பவருக்கான குறியீடாகப் பாவண்ணனால் படைக்கப்பட்டிருக்கிற கதைதான் அட்டை என்பது. தன் பட்ட பெயரை அட்டை எனக் கொண்டிருக்கிற கோபால், சக நண்பனை உறிஞ்சி படுத்துகிற பாட்டைப் பேசுவதுதான் இக்கதையின் சாரம். இக்கதை பெயரளவில் அட்டை என உள்ளதே தவிர. அட்டை என்னும் உயிரினம் பற்றிய எவ்விதத் தகவலும் இதில் இல்லாத திருப்பது பெரும் ஏமாற்றத்தையே தருகிறது.

தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் ஈரறிவு உயிர்கள் பற்றிய பதிவுக் கதைகளைத் தேடிப் பார்க்கும்போது, மீனினம் பற்றியன மட்டும்தான்வெகுவானஎண்ணிக்கையைக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் சா.கந்த சாமியின் தக்கையின் மீது நான்கு கதைகள் என்னும் கதை, ஒரு வாளை மீனை வேட்டையாடப் போராடுகிற மாணிக்கம் என்னும் தாத்தாவிற்கும் ராமு என்னும் பேரச் சிறுவனுக்கும் இடையிலான வன்ம உணர்வைப் புலப்படுத்துவதாகவும், பிரபஞ்சனின் மீன் என்னும் சிறுகதை, மீன் உணவு மீது வெறி கொண்டிருக்கிற கிராமணி என்னும் தந்தைக்கும், அதனை வெறுத்து ஒதுக்குகிற நடராஜன் என்னும் மகனுக்குமான மனப் போராட்டத்தை வெளிப்படுத்துவதாகவும், அம்பையின் மஞ்சள் மீன் என்னும் கதை தன் சிறு மகளின் அஸ்தியைக் கரைத்த கடலிலேயே, மகள் போன்ற ஒரு சிறு மஞ்சள் மீனைக் காப்பாற்றி நீந்த விடுகிற ஒரு தாயின் மனத் தவிப்பையும், பெருமாள் முருகனின்

நடுப்பகல் மீன்கள் என்கிற கதை, தம்மைப் பிடித்துச் சமைக்க முயல்கிற உவன் உள்ளிட்ட மூன்று சிறார்களின் மீன் பிடி முயற்சிகளைக் கைகூடாமல் செய்கிற மீன்களைப் பற்றியும் படைக்கப்பட்டிருக்கின்றன. மேற்காட்டிய பல கதைகள் வேட்டை, சாகசம், சமையல் என்பனவாகமட்டுமே அமைய, அம்பையின் மஞ்சள் மீன் என்கிற ஒரு சிறுகதை மட்டுமே ஒரு மீன் மீதான பரிவைச் சற்று சுட்டுவதாக இருக்கிறது. இதற்கு, இந்த மஞ்சள் மீனை திருப்பி சமுத்திரத்தில் போடுறியா என ஒரு தாய் கேட்கும் நிலையில் ஒரு சிறுவன் அதைக் கடல் நீரில் சேர்க்கும் போது, "மீன் மடக்கென்று நீரைவிழுங்கியது மீண்டும் மீண்டும் வாய்ப் பிளந்து நீரை உறுஞ்சியது. பிறகு ஒரு வாள் வீச்சு. மமதையுடன் ஒரு குதிப்பு. வாலை இரு புறமும் சுழற்றி முன்னால் நீந்தியது"[8] என்பதாகச் சுட்டி, கதை நிறைவதைச் சான்றாக்கலாம்.

மேற்காட்டிய சிறுகதைகளின் உள்ளடக்கப் பொருண்மைகளைப் பார்க்கும்போது நத்தை பற்றிய கதை, தீங்கிழைக்காமை, தத்துவார்த்தம் பற்றியும், சங்கு பற்றிய கதை பேராசைக்கான குறியீடாகவும், சிப்பி பற்றிய கதை திறக்கப்படாத பேரன்பிற்கான சமனியாகவும், மீன்கள் பற்றிய கதைகள் வேட்டை, சாகசம், உணவாகுதல் உள்ளிட்டவற்றுக்கானவையாகவும் மட்டுமே சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அம்பையின் மஞ்சள் மீன் மட்டுமே மீனின் மீதான பரிவைக் கோருவது போலத் தென்படுகிறது. எனினும், இதுவும் ஒருவிதச் சுயநலனின் பொருட்டாகவே சித்திரிக்கப்பட்டிருப்பதை நுணுக்க வாசிப்பில் காணலாம்தான்.

நிறைவாக

தமிழ்ச் சிறுகதைப் படைப்பு வெளியை முன்வைத்து, ஈரறிவு உயிர்கள் குறித்த பதிவு முயற்சிகளின் நோக்கங்களைக் கண்டறிய முற்படும் இடத்து இவற்றுள் பெரும் பான்மையனவும் மனிதர்களின் சுய நலன்களை மையமிட்ட, மனித மையப் பார்வை கொண்டு மட்டுமே படைக்கப் பட்டுள்ளமை என்பது புலனாகிறது. இவற்றுடன், கடல்சார் படைப்பாளியர்கள் மீன், நத்தை உள்ளிட்டனவற்றையும், பிற படைப்பாளியர் அட்டை முதலானவற்றையும் தம் கதைகளுக்கான பொருண்மை களாக்கியுள்ளமை என்பதும், தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளியருள் பெரும் பான்மையோர் ஈரறிவு உயிர்கள் குறித்த அரவணைப்பை பெரிதும் வழங்கவில்லை என்பதும் பரவலாகப் புலப்படலாகின்றன. மானுடர்களான நாம் வாழும் பூமி நமக்க ானது மட்டுமல்ல பெயரிடப்படாத சிறு சிறு செடிகள், கொடிகள், புற்கள், பூண்டுகள், பூச்சியினங்கள் என்கிற அனைத்துக்கும் உரியதுதான் எனும் மனப்பான்மையை, வெகுசன மக்களானோர் எய்தாமல் இருந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால், உலகையே மாற்றியமைக்கும் திராணி கொண்டுள்ள படைப்பாளியர்களிடத்து கூட, இது இல்லாதிருப்பதென்பது ஒருவிதப் பதை பதைப்பையே உருப்பெறச் செய்வதாய் உள்ளது. இனிவரும் காலங்களிலாவது இந்நிலை மாறும் என நாம் நம்புவதைத் தவிர, செய்ய வேறொன்றும் இல்லை.

சான்றெண் விளக்கக் குறிப்புகள்

1. ச.வே.சுப்பிரமணியன் (தெ.ஆ)., தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் உயிர்ப் பாகுபாடு, நூற்பா எண்.1526, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108, ஐந்தாம் பதிப்பு - ஜனவரி 2003.
2. ஈரறிவு உயிரினங்கள் விளக்கம், google. search.
3. ஈரறிவு உயிரின வகைகள். google.search.
4. இரா.அறவேந்தன், சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம், 'பெரும் பாணாற்றுப்படை', பா.வ.280-282, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -98, ப.93.

5. மா. பரமசிவன், சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம், அகநானூறு - நெய்தல், பா.எ.10:10-12, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -98, ப.115.
6. பிரேம்-ரமேஷ், மகாமுனி 'நத்தைகதை', அடையாளம், புத்தாநத்தம், திருச்சி -10, முதல் பதிப்பு.2005, ப.189.
7. நா.பார்த்தசாரதி, நா.பார்த்தசாரதி சிறுகதைகள் தொகுப்பு -1, "வலம்புரிச் சங்கு", விக்கி மூலம், https://share.googel/dwhsdim2g6devbard.
8. அம்பை, அம்பைகதைகள் 'மஞ்சள்மீன்', காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் - 001, ஆறாம் பதிப்பு. பிப்ரவரி 2022.